International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இமையத்தின் கோவேறு கழுதைகள் புதினத்தில், வண்ணார் சமூகத்தின் வாழ்வியல்

**ர. பிரசாந்த்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் பா. திருஞானசம்பந்தம்**
இணைப்பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர் - 608 002

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்வியல் சிந்தனைகள் என்பது மனிதனை அறநெறியுடன், பண்புடையவனாய், சமூகம் இயற்கையோடு இணைந்து வாழும் முறைகளை வலியுறுத்துவதாகும். இமையத்தின் 'கோவேறு கழுதைகள்' புதினம், வண்ணார் சமூக மக்களின் ஒடுக்குமுறை, அவல வாழ்வியலை பதிவுசெய்கிறது. சமூகத்தின் அடிநிலையில், சாதியப் பாகுபாடுகளுக்கு உள்ளாகி, தலைமுறை தலைமுறையாகத் துணிதுவைக்கும் தொழிலில் மூழ்கி ஒடுக்கப்படும் வண்ணார் மக்களின் நிஜ வாழ்க்கையை புதினம் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**முதன்மைச் சொற்கள்:** வண்ணார் சமூகம், சாதியப் பாகுபாடுகள், வாழ்வியல், அவல நிலை.

## முன்னுரை

சமூக மக்களின் வாழ்வியல் சிந்தனைகள் என்பது பண்பாடு, சாதி ஒழிப்பு, சமூகநீதி, சமத்துவம் மற்றும் கூட்டு வாழ்க்கை சார்ந்த விழுமியங்களை அடிப்படையாக கொண்டவை. மனிதனின் பண்பட்ட நடத்தை, பழக்கவழக்கங்கள், நீதிநெறிகள், மற்றும் சமூக ஒழுக்கம் ஆகியவை ஒரு சமூகத்தின் அடையாளமாக விளங்குகின்றன. இச்சிந்தனைகள் சாதிய ஏற்றத் தாழ்வுகள், மூடப்பழக்கங்கள், முதலாளிய ஆதிக்கத்திற்கு எதிரான மாற்றத்தையும், மனித நேயத்தையும் வலியுறுத்துகின்றன. ஆகவே, இக்கட்டுரை, இமையம் புதினத்தில் சாதிய அடுக்குமுறையில் கீழானவர்களாக கருதப்பட்ட வண்ணார் சமூகத்தின் வாழ்வியலை பிரதி பலிக்கும் வகையில் **"இமையத்தின் கோவேறு கழுதைகள் புதினத்தில், வண்ணார் சமூகத்தின் வாழ்வியல்"** பற்றி ஆராய்கின்றது.

## சமூகவியல் பார்வையில் இமையம் படைப்புகள்

அண்ணாமலை என்னும் இயற்பெயருடைய இவர் ‘இமையம்’ என்னும் பெயரில் தமிழ்மொழியில் சிறுகதைகள், புதினங்கள் போன்ற நவீன இலக்கியங்களைப் படைத்து வருகிறார். இவரது படைப்புகள் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்தாலும், தடை படாமல் தன் படைப்புகளை தொடர்ந்து படைத்து வருகிறார்.

## சமூகத்தின் அடிமட்டத்தில் வாழும் மக்கள்

சமூகத்தின் அடிமட்டத்தில் வாழும் சாதிய மக்களையே இமையம் தம் கதைமாந்தர் களாக படைத்துள்ளார். “வறியவர் எல்லாம் கீழ்ச்சாதிக்காரர்கள் இல்லை. ஆனால் கீழ்ச்சாதிக் -

காரர் எனப்படுபவர் பெரும்பான்மை வறுமை எல்லைக்குள் உழல்பவரே"[1] என்பர்.

இல்லாமை என்பது சமூகத்தின் மிகப்பெரிய கொடுமையாகும். "கொடியது கேட்கின் நெடியவெல் வேலோய் கொடிது கொடிது வறுமை கொடிது"[2] என்றார் ஔவையார். வறுமை இறைவனால் விதிக்கப்பட்ட விதி என்று எழுத்தாளருள் சிலரும் கருதுவர். "இந்த உலகத்தில் இறைவன் நடத்தும் துன்பியல் நாடகம் வறுமை, அதாவது இல்லாமை. என்பது ஜெக சிற்பியனின் கருத்து என்பர்"[3] வறுமைக்குக் காரணம் இறைவன் விதித்த விதியா? இக்கேள்விக்குத் திரைப்படக் கவிஞர் உடுமலை நாராயணகவி, கள்ளத் தனத்தாலே செல்வம் குவிக்கும் கயவர்களின் வினையே காரணம் என்பார். இதனை,

**"தாழ்தோர் உயர்ந்தோராக**

**மக்கள் வாழுகின்றாரே**

**சிலர் தனவந்தர் பலர் தரித்திரராய்க்**

**காணுகின்றாரே**

**இது யார் செயல்? விதியா? வினையா?**

**அறிந்து சொல்வீரே...........!"[4]**

என, வறுமை என்பது கடவுள் விதித்த விதியாகாது. பொருளாதார ஏற்றத்தாழ்வும், வேலை யில்லாத் திண்டாட்டமும், உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாமையும், மக்கள் தொகை பெருக்கமும் வறுமைக்குக் காரணங்களாக அமைகின்றன.

### விளிம்புநிலை மக்கள்

புதிரைவண்ணார் என்ற சாதியைச் சார்ந்தவர் கள் அலைக்குடிகள் அல்லது நாடோடிகளாக இனங்காணப்படுகின்றனர். இவர்கள் விளிம்பு நிலை மக்களாகவும், 'தலித்' மக்களா கவும் உள்ளனர். இவ்வின மக்கள் தமிழகமெங்கும் பரந்து காணப்படுவதை கோவேறு கழுதைகள் புதினம் கூறுகின்றது.

சூத்திரர்களாகியத் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கீழ்நிலையில் நின்று அவர்களுடைய இறப்புச் சடங்குகளையும், அவர்களுடைய அழுக்குத் துணிகளை வெளுத்தல் போன்றத் தொழில்க ளையும் செய்து வருகின்றனர். இவர்கள் இரவில் மட்டுமே நடமாட அனுமதிக்கப் பட்டனர். இன்று அம்முறை இல்லை. தொழில்முறையில் வண்ணார் பிரிவினராகக் கருதப்பட்டாலும், குடிவண்ணார் பெற்றுள்ளச் சமூதாய அந்தஸ்து இவர்க ளுக்கு இல்லை. இவர்கள் கீழ்ச்சாதிக்கும் கீழ்ச்சாதியாகத் தான் கருதப்பட்டனர். என்பதனை,

"எங்க போனாலும் இப்படித்தான் நடத்து வாங்க, நாம, கீழ்சாதிக்குக் கீழ்சாதி வேலை செய்யுறவுங்க அதனாத நம்மை இப்படித்தான் செய்வாங்க!"[5] எனவரும் உரையாடல் மூலம் இவர்களின் சாதிய முறையிலான நிலையை நாம் புரிந்து கொள்ளமுடிகின்றது. அதனைப் போல், 'இந்த ஊருக்கு அந்த ஊரு தேவலான்னு போவ வேண்டியதுதான்.' என வரும் உரையாடலில் இவர்கள் இடம்விட்டு இடம் சென்று பிழைப்பை நடத்தும் நாடோடி கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

### காலணித் தெரு வண்ணார்

இந்த பிரிவைச் சார்ந்தவர்கள் 'கீழ்ச்சாதிக ளுக்கும் கீழ்சாதி' என்றப் பிரிவில் வைத்துப் பார்க்கப்படுகின்றனர். சாதிய முறையில் தாழ்த்தப்பட்டவர்களாக கருதப்படும் பறையர், பள்ளர், சக்கிலியர் என்போரிடம் அவர்க ளுக்குக் கீழாக அடிமைகளாகப் பணி செய்து வரும் அவலத்தைப் பெற்றுள்ளனர். இவர்க ளைப் 'புதிரை வண்ணான்' என்றும் அழைப்பர்.

பள்ளர், பறையர், சக்கிலியர் போன்றச் சூத்திரச் சாதிகளானத் தலித்துகளுக்கானத் துணிகளை வெளுத்தல், இறப்புச் சடங்கு களைச் செய்தல் என்ற தொழில்முறையில் வேலைகளைச் செய்து வருகின்றனர். இவர்கள் குடித்தெருவில் மட்டுமல்ல பறத் தெருவிலும் நடக்க அனுமதிக்கப்படாமல் இருந்தனர். இன்று அந்நிலை இல்லை. மேல் சாதிகாரர்களுக்கும் கீழ்ச் சாதியினருக்கும் அடங்கி நடப்பவர்களாக இருக்கின்றனர். ஆண்டு முழுவதும் வேலைச் செய்பவர்களாக (24-மணிநேரமும்) இவர்களின் வேலை இருந்ததை என்பதைக் கோவேறு கழுதைகள் புதினத்தின் வழி அறியமுடிகின்றது.

### வண்ணார் சமூக மக்களின் வாழ்வியல் சிந்தனைகள்

'ஆரோக்கியம்' என்ற கதாப்பாத்திரத்தை மையப்படுத்தியே இப்புதினம் படைக்கப் பட்டுள்ளது. 'சவுரி' ஆரோக்கியத்தின் கணவ னாகத் துணைப்பாத்திரமாகப் படைக்கப்பட்டு உள்ளது. ஆரோக்கியத்தைச் சுற்றி கதை நகர்கிறது. ஆரோக்கியத்தின் கணவன் சவுரி. இவர் களுக்கு ஜோசப், மேரி, பீட்டர் என்ற மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். 'கீழ்ச் சாதி வண்ணார்' என்ற இனத்து மக்கள்,

தமிழகச் சாதியின் கட்டமைப்பில் கீழ்ச் சாதிக்கும் கீழ்ச் சாதியாகச் சிக்கித் தவிக்கின்றனர் என்பதின் சமூகப் பின்புலம் இதில் காட்டப்பட்டுள்ளது. ஊரில் உள்ள அனைவருக்கும் ஏவல் வேலை செய்து வருவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

### குடும்ப வாழ்வும் தொழிலும்

புதிரை வண்ணான் என்ற இனத்தவர்கள் ஒரேயொரு குடும்பம் என்ற நிலையில் தனித்து வாழ்ந்துப் பழகியவர்கள். ஒரு குடும்பத்தில் ஆறுமுதல் ஏழுவரை எண்ணிக்கை வரையில் குடும்ப உறுப்பினர் கள் இருப்பர் என்பதை கோவேறு கழுதைகள் புதினம் பதிவு செய்கிறது.

கதைமாந்தர்களான ஆரோக்கியம், கணவன் சவுரி, மகன் ஜோசப், மகள் மேரி, சிறிய மகன் பீட்டர் என மொத்தம் ஐந்து நபர்கள் இவர்களின் குடும்ப உறுப்பினர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் ஒட்டு மொத்தமாகவே துணிவெளுத்தல் என்ற தொழிலை நம்பிவாழ்வதாகப் படைக்கப் பட்டுள்ளது. மேலும், கோவேறு கழுதைகள் புதினம் இவ்வினத்தாரின் தொழில்களாகப் பதிவுசெய்துள்ளது. ஆரோக்கியம் (முதன்மைப் பாத்திரம்) மூன்று நாள் காய்ச்சலில் படுத்து விடுகிறாள், அச்சமயத்தில் ஊரில் அழுக்குத் துணிகளை எடுக்க ஆள் வராததால், ஊரில் இருப்பவர்கள் ஆரோக்கியத்தையும் அவள் சார்ந்தச் சாதியையும் திட்டுகின்றனர். இதனை,

**“ரண்டு நாளாத் துணியும் எடுக்கல. முந்தா நாளு**

**எடுத்துக்கிட்டுப் போன துணியும் வரல. அவனவன் இடுப்புல**

**துணி இல்லாம நிக்கறான்”**

**“வரவர வண்ணான் போக்கே சரியில்ல மோசம்”**

**“இவனெ மாத்திக்கிட்டாத் தேவலாம்”**

**“அங்கங்க கெடக்கறானுவ நான் நீன்னு போட்டி**

**போட்டுக்கிட்டு வரங்கிறானுவோ”**

**“நிசம்தான் இவன் சரியில்ல”**

**“வண்ணான் வண்ணானாவா இருக்கானிப்போ”[6]**

எனவரும் இந்த உரையாடல்கள் மூலம் அறியலாம். இந்த உரையாடல்கள் ஊரார் பேசுவதைப் போல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த உரையாடலில் இவர்களின் வேலையே வீடுவீடாகச் சென்று துணியெடுத்து அழுக்கு நீக்கித்தருதல் என்பதை உணர்த்துகின்றது.

"வீடு வீடாக ஆரோக்கியம் துணி வாங்கிக் கொண்டு போனாள். பின்னால் பீட்டர் அவற்றை மூட்டையாகக் கட்டி தூக்கிக் கொண்டு போனான். விதைப்புக்காலமாக இருந்ததால் அதிகத் துணி விழவில்லை."[7] என்ற இந்தப் புதினத்தின் நிகழ்வுக் காட்சியில் ஆசிரியர் கூறும் கூற்றாக இது அமைந்திருக்கிறது. இதில் குடும்பத் தலைவன் / தலைவி ஆகியோரே முன்னின்று அழுக்குத் துணிகளை வீடுவீடாகச் சென்று வாங்கிக்கொள்வர் என்பதும் இவர்களில் யாரேனும் உடல்நிலை சரியில்லை என்ற நிலையில் அவர்களது குடும்பத்தின் பிற உறுப்பினர்களான மகன் அல்லது மகள் ஆகியோர் துணிகளை வாங்கிவந்து வெளுத்து தருவர் என்பதைச் சமூகவியல் நோக்கில் கோவேறு கழுதைகள் புதினம் பதிவு செய்துள்ளது.

"கிழவர்களும் சிறுவர்களுமே கிராமத்தின் உயிர்ப்பை நிருபித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் போதுமான அளவுக்கு வாரிவந்து துணிகளைப் போட்டார்கள். கடைசித் தெரு வானக் கொத்துக்கான் அடையன் தெருவில் ஆரோக்கியம் துணி எடுத்துக்கொண்டிருந் தாள் திடீரென்று ஆரோக்கியத்திற்கு நடுக்கம் ஏற்பட்டு, மயக்கம் வருவதைப் போல் இருந்தது. அந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டாள். பீட்டரை பாக்கியிருக்கும் வீடுகளுக்கு போகச் சொன்னாள்"[8] என்ற புதினத்தின் கதை நிகழ்வில் குடும்பத்தலைவியை அடுத்து அந்த வேலையை மகன் அல்லது மகள் செய்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம். இவ்வாறு சேகரித்தத் துணிகளை எடுத்துச் சென்று குளத்தில் ஊற வைத்துத் துவைத்து, வெயிலில் காயப்போட்டு, பின்னர் அந்தந்த வீடுகளுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவர். இதுவே இவர்களது தொழிற் முறையில் பிரதானமானது எனலாம்.

துணிகளை வெளுக்க ஊரிலுள்ள குளத்தைப் பயன்படுத்தினர். துணி துவைக்கும் இடம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒன்று குடிவீட்டு வண்ணார் துவைக்கும் இடம். மற்றொன்று காலனி வீட்டு வண்ணார்

துவைக்கும் இடம் என்பதாகும். ஆனால் தண்ணீர் ஒன்றுதான். அந்தக் குட்டைக்கு,

“வண்ணான் குட்டை”[9] என்று பெயர் எனக் கோவேறு கழுதைகள் புதினம் கூறுகிறது.

“ஆரோக்கியம் துவைக்காமல் வைத்திருந்தப் பாக்கித் துணிகளைத் திரவியராஜ் துவைக்க ஆரம்பித்தான். திரவியராஜூடன் பீட்டரும் துணி அடித்துப் போட, அலசிக் காய வைத்தாள் ஆரோக்கியம். நான்கு மொடாக் கள் இருந்தன. கழுத்தை உடைத்து வீட்டில் இருந்தார்கள். மூன்றில் உயமண்ணும், மற்றொன்றில் நீலம் கரைத்த நீரும் இருந்தது. உயமண்ணைக் கொண்டு வந்து மொடாவில் கரைத்து, அதில் ஒவ்வொரு துணியையும் நன்றாக நனைத்து ஊறவைத்து எடுத்து முறுக்கி முறுக்கி ஆரோக்கியம் மணலில் போட்டாள். முறுக்கிப் போட்ட துணிகள் ஒன்றின்மேல் ஒன்றாக, குட்டி மலையாக இருந்தன.

வெள்ளைத் துணிகளை அடித்து நீலம் போட்டு முன்பே காய வைத்திருந்தாள். சவுரி தான் வாரத்திற்கு ஒருமுறை நெசலூர் சென்று சிமிட்டிச் சாக்கு நிறைய உயமண் கொண்டு வருவான். அந்த ஊரைத் தாண்டிப் போனால் பெரியக்கட்டாஞ்சிக் காடு வரும். அங்குதான் இந்த உயமண் இருக்கும்.

“முன்பு, சவுரி (கணவன்) கழுதையின் மீது கொண்டு வருவான். ஒரு மாதம் வரை வெளுப்புக்கு வரும். வாயில் போட்டால் உப்புக் கரிப்பது போல் கரிக்கும். அந்த மண் அதை நீரில் கொட்டிக் கரித்து அதில் துணியைப் போட்டு ஊறவைத்து எடுத்தால் நீரில் உப்புக்கரைத்தது போல் அழுக்குப் போன இடம்தெரியாது. பிறகுதான் அடித்துத் துவைப்பார்கள்.”[10] என, கோவேறு கழுதை கள் புதினத்தில் இடம் பெற்றுள்ள கதை நிகழ்வின் காட்சி இது ஆசிரியரின் கூற்றாக அமைந்துள்ளது.

இக்கூற்றின் துணித்துவைத்தல் என்பது விளக்கமாக கூறப்படுகிறது. துணிகளை எவ்வாறு அழுக்கு நீக்கி, நீலம் இட்டு தூய்மைச் செய்கின்றனர் என்பதும், அழுக்கு நீக்கியாக ‘உயமண்’ பயன்படுவதும் இதனுள் உரைக்கப்பட்டுள்ளது. இன்று ‘டிட்டர் ஜென்ட் பவுடர்’ ‘சோப்புகள்’ ‘வாசிங் மிஷன்கள்’ துணி வெளுப்பிற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

மேற்குறிப்பிட்ட கருத்துகளின் வழியே வண்ணார் சமூகத்தின் இயல்பு வாழ்க்கைப் படம்பிடித்துக் காட்டப்படுவதுடன் துணிகளைத் துவைப்பதற்கு இவர்கள் வரகு, கம்பு, சோளம், ராகி, போன்றத் தானியங்களைக் கூலியாகப் பெறுவர் என்றும், சிறிய அளவில் தொகையும் பெற்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

### கேலியும், கிண்டலும்

வண்ணார்களின் நிலை மோசமானதாக இருக்கிறது என்பதை கதைமாந்தர்களின் உரையாடலில் மூலமாக அறியமுடிகின்றது. இதனை, “ஆரோக்கியத்துக் கென்னடியம்மா? பூசக்கார வெள்ளாச்சியாட்டம். காடு, கரென்னு திரிஞ்சா உடம்பு இருக்குமா? கல்லு குண்டாட்டம் இருக்கு பாரு. அஞ்சிகாணி நஞ்ச பிஞ்ச இருந்து என்னத்துக்கு? மயவல்லியேன்னு கவலையா? காடு வெளயிலன்னு கவலயா? சொல்லு பாப்பம், அவளுக்கென்ன, நம்ப பறத்தெருச் சோறே அவசோறு”[11] என்ற இந்த உரையாடலில் இவர்களது நிலையைக் கேலியாக கூறப் படுகிறது என்பதுடன் பறையர்களைச் சார்ந்து வாழ்க்கை நடத்துபவர்கள் இவர்கள் என்பதையும் புரியவைக்கிறது. மேலும்,

"மீண்டும் மேரி கிழசல் தைக்கத் தொடங்கினாள், சேலை ஒன்றைத் தைக்கும் போது ஊசி விரலில் இறங்கிவிட்டது... இதைத் தைத்தால், கால்படி அரைப்படி தானியமோ, மிளகாய், புளி, பருப்பு என்று குழம்பிற்கோ கிடைக்கும் என்று தைத்தாள்.”[12] என்பது மூலம் கிழிந்தத் துணிகளைத் தைத்தும் அதன் மூலம் தானியங்கள் அல்லது இதரப் பொருட்களைக் கூலியாகப் பெற்றுக் கொள்வர் என்பது தெரியவருகிறது.

### இறப்பு சடங்குகள் செய்தல்

துணி வெளுத்தல், கிழிந்தத் துணிகளைத் தைத்தல், அறுவடைக் காலங்களில் கலம் தூற்றல் போன்ற வேலைகளைச் செய்துவரும் இவர்கள் ஊர்களில் யாரேனும் இறந்தால், அந்த வீட்டில் இறப்புச் சடங்குகள் செய்வதிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

“ஒவ்வொரு வீட்டு நல்லதிலும் கெட்டதிலும் தவறாமல் சவுரி குடும்பம் இருக்கும்......என வருவதிலும், சவுரி துணிகளைக்கட்ட ஆரம்பித்தான் பாடையைச் சுற்றித் துணியை

கட்டினாள். இணைப்பதற்குப் பெரியக் கட்டாஞ்சி முள்களைக் கொடுத்தாள். சவுரி பாடை முழுக்கத்துணி கட்டிமுடிந்தான், ஆரோக்கியம், பாடையைச் சுற்றித் தென்னங் கீற்றுத் தோரணைக் கட்டினாள்."[13] என புதினத்தின் இக்கதை நிகழ்வின் வழியே, சாவு வீட்டில், இறப்புச்சடங்குகளைச் செய்து வந்தனர் என்பதை இதன்வழி அறியத்தக்கது.

"பிணத்தின் தலை இருந்த திசையில், குழிமேட்டுக்குச் சிறிது தள்ளி, தரையில் சவுரி சிறிய பள்ளம் ஒன்றைப் போட்டான். பிறகு இளநீர் சீவி, பசு மாட்டுப் பாலில் கலந்து ராமசாமி பிணத்தின் மீது தெளித்து பின்பு, பிணத்துக் குழியின்மேல், இளநீர் வைத்து ஊதுபத்தி ஏற்றிவைத்தான். சவுரி பிணக்குழி மேல் குங்குமம், சந்தனம் கரைத்து ஊற்றினான். ஓட்டைப் போட்டுக் கிடந்த குடத்தைக் கொடுவாளால் சில்லு சில்லாக உடைத்து நொறுக்கினாள். வடக்கு முகமாக விழுந்து கும்பிட்டு விட்டுப் புறப் பட்டான்."[14] என்ற இந்தக் கதை நிகழ்வில் காட்டப்படும் இக்காட்சியில் இச்சமூகத்தார் சாவுச்சடங்கில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதைக் காணலாம்.

### குழந்தைப்பேறில் மருத்துவச்சி

ஊரில் உள்ள கர்ப்பிணிகளுக்கு குழந்தை பிறந்தால் உடனிருந்து பிரசவ வேலை-களைச் செய்து வந்ததாகப் புதினத்தில் கூறப் பட்டுள்ளது. இதன்மூலம் மகப்பேறு காலத்தில் இச்சாதியைச் சார்ந்தப் பெண்கள் குழந்தைப் பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கு உதவியாக இருப்பர் என்பதையே இது பதிவுசெய்கிறது. அதற்கானக் கூலியாக தானியங்கள், சிறிதளவு பணம் போன்றவைகள் பெற்றனர்.

“வெள்ளி கிழக்கே முளைத்த போதுதான் வழியண்டானது. மிருகத்தனமாக ஆரோக்-கியம் சித்ராவின் மேல் வயிற்றைப் பிடித்தழுத்தினாள். அப்போதுதான் சிசு வெளியே தெரிந்தது. மந்திரம் செய்யப் பட்டவள் போல் விளக்கெண்ணையை முழங்கை வரை தடவிக் கொண்டு மெல்ல மெல்லக் கையை உள்ளே விட்டான். மீனாட்சி, சுசீலா ஆளுக்கொருவராகக் கையையும் காலையும் பிடித்து அழுத்திக் கொண்டிருந்தனர். மெல்ல வழவழவென்று ஆரோக்கியம் உருவியெடுத்தாள். பெண் பிள்ளை மாலைச் சுற்றிப் பிறந்திருந்தது சித்ரா மயக்கமாக வைக்கோலில் துவண்டு கிடந்தாள்...."[15] என, பிரசவக் காலங்களில் பிள்ளைப் பெற்றெடுக்கத் துணையாக இருந்தனர் என்பதைக் கோவேறு கழுதைகள் புதினம் பதிவுசெய்கிறது. பூப்படைந்த வீட்டில் இரத்தக்கறை துணிகளை அப்புறப்படுத்துதல், அவர்களின் சடங்குகளை இச்சமூகம் சார்ந்த பெண்களே முன்னின்று செய்வது தருவதாக கோவேறு கழுதைகள் புதினம் உரைக்கிறது. இதனை,

“இந்த ஊருல யாருடைய அழுக்க நான் சுத்தம் செய்யல?"[16] என்பதின் மூலம் இதனை உணரத்தக்கது.

### இராச் சோறு

வண்ணார் பிரிவில் கீழ்ச்சாதியாக உள்ள புதிரை வண்ணார்களின் சமூக வாழ்க்கை முறையில் உணவு ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும். காரணம் பெரும்பான்மையான நாட்கள் இவர்கள் வீட்டில் சமைக்க மாட்டார்கள். இரவு நேரங்களில் வீடு வீடாகச் சென்றுப் பாத்திரத்தில் சோறு வாங்கி அதை குடும்பத்தினர் அனைவரும் பகிர்ந்துண்பர் என்பதைக் கோவேறு கழுதைகள் புதினம் பதிவுசெய்கிறது.

"கியப்பட்ட சாதிக்கிக் கிபப்பட்ட சாதியாப் பொறப்புச்சிப் புட்டியே அந்தோணி யாரே!"[17] என ஆரோக்கியம் (முதன்மைப் பாத்திரம்) சொல்லி அழும் இந்த வரிகளில் இந்த சாதியினரின் நிலையை நமக்குப் புரிய வைக்கிறது. மேலும், "ஏம்மா நாம்ப ராச்சோறு எடுக்காம இருக்கக் கூடாதா? நெதமும் நம்பூட்டுல சோறாக் கனா என்ன?" ஏன்டா? "மத்தவுங்க வூடுமாரி நம்முட்டுலியும் சோறாக்கு’’’பசங்க எல்லாரும் என்னெ ராச்சோறு, ராச்சோறுன்னு எளக்காரம் பண்றாங்க"[18]

என பீட்டர் ஆரோக்கியத்திடம் கேட்பதைப் போல் அமைந்திருக்கும் இந்த உரையாடலில் இவர்கள் இராச்சோறு எடுத்து உண்ணும் பழக்கத்தைக் கொண்டவர்கள் என்பதை இது உணர்த்துகிறது.

"ஊர் நெருங்க நெருங்க ஆரோக்கியத்திற்குக் கவலை வந்துவிட்டது. ஊர்ச் சோறு எடுக்கப் போகவேண்டும். அப்போது ஒவ்வொருவரும் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லி மாளாது. ஆனாலும், சொல்லித்தான் தீரவேண்டும்"[19] என்பதில் ஆரோக்கியத்தின் (குடும்பத் தலைவி) கவலைப் புலப்பட்டு

நிற்கிறது.

"மீனாட்சி உள்ளே சென்று சிறிது நேரம் கழித்துச் சோறு கொண்டு வந்து, ஆரோக் கியம் கொண்டு வந்திருந்த குண்டானில் கொட்டிவிட்டு மீண்டும் உள்ளே போனாள். மூன்று மாகாணி அரிசியின் சோறு வேகக் கூடிய குண்டான் அது. மீனாட்சி தடதடவென்று இருந்த குழம்பை கொண்டுவந்து தூக்குப் போகணியில் ஊற்றினாள். கத்தரிக் காய்க் குழம்பு, வாழை, பூசணிக்காய், பரங்கிக்காய்ப் பொரியல் எல்லாம் ஒரு சின்னக் குண்டானிலிருந்து சோற்றின்மேல் அள்ளி வைத்து, போதுமா? என்பது போல மீனாட்சியின் பார்வை இருந்தது.

ஆரோக்கியமும் முகத்தை விரித்துச் சிரிக்க முயன்றாள். ஆரோக்கியம் வேண்டு மென்றேதான் பெரியகுண்டானாகக் கொண்டு வந்தாள். மீனாட்சியும் 'தூரத்துத் துணியை அலசுகிற வளாச்சே' என்று நிறையப் போட்டாள். விசேஷ தினங்களில், இல்லாத வர்கள் கூட ஆரோக்கியத்திற்குக் குறைவாகச் சோறு போடமாட்டார்கள்"[20] என்னும் வரிகளால் இரவுச்சோறு (ராச்சோறு) வாங்கி உண்பதில் மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதையும் அறிய முடிகின்றது.

## முடிவுரை

விளிம்புநிலை மக்களுக்கான வாழ்க்கைச் சிக்கல்களில் அவர்கள் பின்பற்றிவரும் வேலைகள் எந்த விதத்தில் பாரமாக இருக்கிறது என்பதும், அந்த தொழில்களின் இயல்பும், விளிம்புநிலை மக்களிடம் தொழில் முறையில் எவ்வாறு இவர்களை அணுகி வேலை வாங்கிக்கொள்கின்றனர். வாழ்வியல் சார்ந்த சிக்கல்களோடுப் பொருத்திப் பார்த்துக் கூறப்பட்டு உள்ளது. சமூகங்களி டையே வர்க்கமுரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு முந்தைய மரபினர் வர்க்க முரண்பாடுகளற்ற ஓரினத்தைச் சார்ந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதை ஏன் யாரும் மீட்டுருவாக்கம் செய்துகொள்ள முனைவதில்லை. 'கோவேறு கழுதைகள்' என்ற புதினத்தில், கீழ்ச்சாதிக்கும் கீழ்சாதி மக்களை மையப்படுத்திப் படைக்கப் பட்டுள்ளது. இப்புதினம் ஓரினத்தின் சமூக வாழ்வியலை எடுத்துரைப்பதாக அமைந்து உள்ளது.

## துணைநூற் பட்டியல்

1.சேதுமணி மணியன் (க.ஆ), தமிழ் நாவல்களில் வறுமையும் சாதியும், செண்பகம் வெளியீடு, மதுரை, பக்.129-130.

2.ஔவையார் தனிப்பாடல்கள். புலியூர்க்கேசிகன், மங்கை வெளியீடு, சென்னை,ப.103

3.வெ.கனகசுந்தரம், ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள், முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, ப.147.

4.உடுமலை நாராயணகவி, சங்கை வேலவன் (தொகு.ஆ), நாராயணகவியின் பாடல்கள், பாரதி புத்தகாலயம், சென்னை, ப.210.

5.இமையம், கோவேறு கழுதைகள், க்ரியா வெளியீடு, சென்னை, ப. 7

6.மேலது, ப. 53

7.மேலது, ப. 54

8.மேலது, ப. 54

9.மேலது, ப. 73

10.மேலது, ப. 74

11.மேலது, ப. 75

12.மேலது, ப. 70

13.மேலது, ப. 24

14.மேலது, ப. 29

15.மேலது, ப. 14

16.மேலது, ப.170

17.மேலது, ப.157

18.மேலது, ப.8

19.மேலது, ப.15

20.மேலது, ப.124